

கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி, தியாகதுருகம் அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்கு சாவடியில் தே.மலையரசன் எம்.பி நேற்று முன்தினம் (23.04.2026–வியாழக்கிழமை) நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் தனது வாக்கினை பதிவு செய்து ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.




மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி கழக வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டியன் தொகுதிக்குட்பட்ட தனக்கன்குளம் அரசு உயர்நிலைப் பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி சக்கராபுரத்தில் செஞ்சி தொகுதி திமுக வேட்பாளர்செஞ்சிமஸ்தான் எம்எல்ஏ திமுக நிர்வாகிகளுக்குநன்றி தெரிவித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன் அரசுவழக்கறிஞர் கிருஷ்ணன் உள்ளனர்.

### பிரதமர் மோடியை விமர்சித்துப் பேசினால் நோட்டீஸ் அனுப்புவதா?

# தேர்தல் ஆணையத்துக்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம்!

### உள்நோக்கத்துடன் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக சாடல்!

புதுடெல்லி, ஏப்.25-

தேர்தல் விதிமீறலில் ஈடுபட்ட பிரதமர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு தேர்தல் ஆணையம் உள்நோக்கத்துடன் நோட்டீஸ் அனுப்பியுள்ளதாக ஜெய்ராம் ரமேஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

//பிரதமர் மோடியும், ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவும் தொடர்ந்து தேர்தல் விதிமீறலில் ஈடுபட்டு வருவதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது. இது தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் முறையிட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டாமல் உள்ளது. இதற்கு காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும், மோடி மற்றும் அமித்ஷா மீது நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்திலும் அக்கட்சி சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில், மோடி, அமித்ஷாவின் தேர்தல் விதிமீறல் குறித்து தனது செய்தியாளர் சந்திப்பில் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், அமலாக்கத்துறை உள்ளிட்ட அமைப்புகளை பிரதமர் மோடி பயன்படுத்தி மிரட்டி வருவதாகவே மல்லிகார்ஜுன கார்கே தனது பத்திரிகையாளர் சந்திப்பில் பேசியதாக தெரிவித்துள்ளார். இதுகுறித்து உடனுக்குடன் விளக்கம் கூறப்பட்ட நிலையிலும், உள்நோக்கத்துடன் தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி இருப்பதாக ஜெய்ராம் ரமேஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# செஞ்சி,மயிலம், திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுக்கு நன்றி!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார்!

செஞ்சி, ஏப். 25-

செஞ்சி,மயிலம், திண்டிவனம் சட்டமன்றதொகுதி நிர்வாகிகளுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கூறுகையில்:

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிதிமுக சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. உதய சூரியன் சின்ன த்தில் மூன்றாவது முறையாக போட்டியிட்டார்.

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செஞ்சி மேல்மலையனூர் ஒன்றியங்கள் மற்றும் செஞ்சி அனந்தபுரம் பேரூராட்சிகளில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு உதய சூரியனத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.இந்நிலையில் நேற்று முன்தினம் (23ஆம் தேதி) வாக்குப்பதிவு நடைபெற்றது.

இந்த வாக்குப்பதிவில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட எனக்கு வாக்களிக்க உழைத்த தமதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிகட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இதேபோல் மயிலம் சட்டமன்ற தொகுதியில் தேமுதிக வேட்பாளர் வெங்கடேசன் முரசு தினத்திற்கும், திண்டிவனம் சட்டமன்ற தொகுதியில் வி.சி.க. சார்பில் வன்னியரசு பானை சின்னத்தில் போட்டியிட்டியிட்டனர்.

மயிலம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் வெங்கடேசனுக்கு திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் வன்னி அரசுக்கு வாக்களிக்க உழந்த அனைவருக்கும், மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள்

தி.மு.க. கட்சி நிர்வாகிகளுக்கும்,அனைத்து அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பிலும் எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதாக விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சென்னை புறநகர் வழித்தடத்தில்

# விரைவில் 2வது ஏ.சி. மின்சார ரயில் சேவை!

### ரெயில்வே அதிகாரிகள் தகவல்!

சென்னை, ஏப்.25-

சென்னை புறநகர் வழித்தடத்தில் 2வது ஏசி மின்சார ரயில் சேவை: விரைவில் பயன்பாட்டுக்கு வருகிறது

சென்னை: சென்னையில் 2வது ஏசி மின்சார ரயில் சேவையை விரைவில் தொடங்க ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இந்த ரயிலை சென்ட்ரல் அரக்கோணம் மார்க்கத்தில் இயக்குவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்படுகிறது. சென்னை ஐசிஎப் ஆலையில் தயாரிக்கப்பட்ட 12 பெட்டிகள் கொண்ட முதல் ஏசி மின்சார ரயில் கடந்த ஆண்டு ஏப்ரல் 19ம் தேதி, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கப்பட்டது.

இந்த ரயில் சென்னை கடற்கரை செங்கல்பட்டு மார்க்கத்தில் இயக்கப்படுகிறது. இந்த ரயிலுக்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. இதற்கிடையில், சென்னை சென்ட்ரல் அரக்கோணம், கடற்கரை செங்கல்பட்டு ஆகிய இரு மார்க்கங்களில் 'பீக் ஹவர்சில்' கூடுதல் ஏசி மின்சார ரயில்கள் இயக்க பயணிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

அதன்பேரில், கூடுதல் மின்சார ரயில் இயக்க ரயில்வே வாரியத்துக்கு தெற்கு ரயில்வே பரிந்துரை செய்திருந்தது. ரயில்வே வாரியமும் தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டத்துக்கு ஏசி மின்சார ரயில் தயாரித்து வழங்க, ஐ.சி.எப் நிர்வாகத்திடம்கேட்டிருந்தது. இதையடுத்து, 2வது ஏசி மின்சார ரயில் தயாரிப்பு பணி சென்னை ஐசிஎப் ஆலையில் கடந்த ஆண்டு தொடங்கி நடைபெற்று வந்தது. இப்பணி 2 மாதம் முன்பு நிறை வடைந்தது.

இதையடுத்து, இந்த ஏசி மின்சார ரயிலை தெற்கு ரயில்வேயின் சென்னை ரயில்வே கோட்டத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த ரயில், தற்போது அண்ணனூர் ரயில்வே யார்டில் நிறுத்தி, பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறது. இந்த ரயில் சென்ட்ரல் அரக்கோணம் மார்க்கத்தில் இயக்கியும் சோதிக்கப்படுகிறது.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை சென்ட்ரல் - அரக்கோணம் மார்க்கத்தில் தினசரி சுமார் 200க்கும் மேற்பட்ட மின்சார ரயில் சேவைகள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி சுமார் 4 லட்சம் பேர் பயணிக்கின்றனர். தினசரி காலை, மாலையில் 'பீக் ஹவர்சில்' மின்சார ரயில்களில் கூட்டம் நிரம்பி வழிகிறது. கூடுதல் மின்சார ரயில்கள் மற்றும் ஏசி மின்சார ரயில் இயக்கவும் பயணிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக, இந்த மார்க்கத்தில் ஏசி மின்சார ரயில் இயக்குவது தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### மே 24ஆம் தேதி வரை - பாகிஸ்தான் விமானங்களுக்கு

# இந்திய வான்வெளியில் பறப்பதற்குத் தடை நீட்டிப்பு!

புதுடெல்லி, ஏப்.25-

இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை மே 24ம் தேதி வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22ம் தேதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து ஏப்ரல் 30ம் தேதி, இந்திய வான் வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு மத்திய அரசு தடை விதித்தது. ஆனால் இந்தியாவுக்கு முன்னதாகவே, மே 24 முதல் இத்தகைய தடையை பாகிஸ்தான் விதித்தது. பாகிஸ்தான் வான்வெளியில் இந்திய விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டது.

இரு நாடுகளும் தங்கள் வான்வெளியை மற்ற நாட்டின் விமானங்களுக்கு மூடுவதற்கான தடையை கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் மாறி மாறி நீட்டித்து வருகின்றன. பாகிஸ்தான் தனது வான்வெளி தடையை கடந்த செவ்வாய்க்கிழமை மே 24 வரை நீட்டித்தது.

இந்நிலையில் மத்திய அரசு புதன்கிழமை வெளியிட்ட விமானிகளுக்கான அறிவிப்பு (NOTAM) ஒன்றில் "பாகிஸ்தான் விமானங்கள் (ராணுவ விமானங்கள் உட்பட) இந்திய வான் வெளியை பயன்படுத்த இயலாது. இந்த தடை மே 23ம் தேதி 23:59 மணி (UTC) வரை அமலில் இருக்கும். இந்திய நேரப்படி (IST) மே 24ம் தேதி காலை 05:30 மணி வரை அமலில் இருக்கும்" என்று கூறப்பட்டுள்ளது. இரு நாடுகளின் இந்த நடவடிக்கை ஓராண்டாக நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 தீவிரவாத முகாம்களை ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் இந்தியா தாக்கி அழித்தது. மேலும் சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா ரத்து செய்தது.

### சென்னையில் பாதுகாப்பு ஏற்பாடுகள்:

# மக்கள் அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாக்களித்தனர்!

### காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக் தகவல்!

சென்னை, ஏப். 25-

சென்னையில் வாக்கு பதிவு மையத்தில் மக்கள் அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாக்களித்தனர் என்று, காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக் தெரிவித்துள்ளார். தமிழக சட்டமன்ற தேர்தல் இன்று காலை 7 மணி முதல் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. சென்னை பெருநகர காவல் எல்லையில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் பொதுமக்கள் தடையின்றி வாக்களிக்கும் வகையில் தேர்தல் ஆணையத்துடன் இணைந்து சென்னை பெருநகர காவல்துறை செய்துள்ளனர். குறிப்பாக சென்னையில் பதற்றமாக வாக்கு சாவடிகளை அடையாளம் கண்டு துணை ராணுவ வீரர்கள் உதவியுடன் போலீசார் பாதுகாப்பு பணி மேற்கொண்டு வருகின்றனர்.

வாக்காளர்கள் எளிமையாக வாக்கு அளிக்கும் வகையில் காவல்துறை பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்துள்ளது. ராணி மேரி கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சென்னை போலீஸ் கமிஷனர் அபின் தினேஷ் மோதக் நேரில் பார்வையிட்டார். அப்போது வாக்கு எண்ணிக்கை மையத்தை சுற்றி செய்யப்பட்டுள்ள சிசிடிவி உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அங்கு பணியில் இருந்து காவல் துறை அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார்.

பிறகு பாதுகாப்பு பணியில் உள்ள போலீசாருக்கு உணவு மற்றும் உள்ளிட்ட பொருட்கள் தடையின்றி கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்தார்.

### ஐ.ஐ.டி. - ஐ.ஐ.எஸ்.சி. உயர்கல்வி நிறுவனங்களில் சேர

# ஒருங்கிணைந்த முதன்மைத் தேர்வுக்கு விண்ணப்பப் பதிவு!

### மே-2 வரை விண்ணப்பிக்கலாம்!

சென்னை, ஏப்.25-

மே 17ம் தேதி நடைபெறும் ஜேஇஇ பிரதான தேர்வுக்கான விண்ணப்ப பதிவு ஏப்.23 அன்று தொடங்கியது. ஐஐடி, ஐஐஎஸ்சி போன்ற மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் இளநிலைப் படிப்புகளில் சேர, ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வில் (ஜேஇஇ) தேர்ச்சி பெற வேண்டும். இது முதன்மைத் தேர்வு, பிரதானத் தேர்வு என 2 கட்டங்களாக நடத்தப்படுகிறது.

2026ஆம் ஆண்டுக்கான முதன்மைத் தேர்வு ஜனவரி, ஏப்ரல் மாதங்களில் நடத்தி முடிக்கப்பட்டன. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பிரதானத் தேர்வு மே 17ம் தேதி நடத்தப்பட உள்ளது.

இதற்கான இணையதள விண்ணப்ப பதிவு நேற்று முன்தினம் (ஏப்.23) தொடங்கியது.

தகுதியான மாணவர்கள் https://jeeadv.ac.in இணைய தளம் வாயிலாக மே 2ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த ஆண்டில் இத்தேர்வை ரூர்க்கி ஐஐடி நடத்துகிறது.

காலை, மதியம் என 2 தாள்களாக தேர்வு நடைபெறும்.

# கேரளத்தில் 12 மாவட்டங்களுக்கு வெயில் எச்சரிக்கை!

திருவனந்தபுரம், ஏப்.25-

கேரளத்தில் இடுக்கி, வயநாடு ஆகிய 2 மாவட்டங்கள் தவிர ஏனைய 12 மாவட்ட'ங்களுக்கும் நாளை வரை வெயில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கேரளத்தில் வழக்கத்தை விட இந்த வருடம் கோடை வெயில் வாட்டி வதைத்து வருகிறது. கடந்த பிப்ரவரி மாதம் முதல் பாலக்காடு, கண்ணூர், கோழிக்கோடு உள்பட பல மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. கடந்த சில தினங்களாக திருவனந்தபுரம், எர்ணாகுளம் உள்பட சில மாவட்டங்களில் கோடை மழை பெய்கின்ற போதிலும் வெப்பநிலை குறையவில்லை.

இதற்கிடையே கடந்த 2 மாதங்களாக கேரளத்தில் வெப்பநிலை சராசரியை விட 2 முதல் 3 டிகிரி செல்ஷியஸ் வரை அதிகமாக உள்ளது.

இந்தநிலையில் நாளை வரை இடுக்கி, வயநாடு தவிர மற்ற 12 மாவட்டங்களுக்கும் வானிலை ஆய்வு மையம் வெயில் எச்சரிக்கை விடுத்துள்ளது. பாலக்காடு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வெப்பநிலை 40 டிகிரி செல்சியசை தாண்டி கொளுத்தி வருகிறது. நாளை வரை இந்த மாவட்டத்தில் இதே நிலை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கொல்லத்தில் 39 டிகிரி செல்ஷியசும், கோட்டயத்தில் 38 டிகிரி செல்ஷியசும், ஆலப்புழா, எர்ணாகுளம், திருச்சூர், திருவனந்தபுரம் உள்பட 8 மாவட்டங்களில் 37 டிகிரி செல்ஷியஸ் ஆகவும், திருவனந்தபுரத்தில் 36 டிகிரி செல்ஷியஸ் வரையும் வெப்பநிலை உயரும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

## உதயசூரியன் நமது மடியில்...

எழு ஞாயிறே...
காலை கதிரவனே...
உன் உதயமே... எங்கள் விடியல்...
இன்று மட்டும் உதய சூரியன்
எங்கள் மடியில்...

திரையில் ஓடுவது படம்... அது
தரையில் ஓடி மக்களைக் காக்குமா?

அரோகரா என்றால் ஆன்மிகம்
சகோதரா என்றால் அரசியல்...!
தம்பி வா... தலைமை ஏற்க வா...!
மாங்குயில் பாடுமிடத்தில்...
கோட்டான்கள் குறை சொல்வதோ?

காக்கைகள் கூடலாம் ஒரு கோடி
மயில்தானே தேசிய சின்னம்.
அடிமை ஒருவன் முடி சூடினால்
எங்கே போகும் சுதந்திரம்?

அறியாத கூட்டமல்ல...
நம் மறவர்
கூட்டம்...!

மானம் பெரிதென உயிர் விடுவான்
மற்றவர்க்காக துயர் படுவான்.
தானம் வாங்கிட கூசிடுவான்
தருவது மேலென பேசிடுவான்.

சகோதர யுத்தம்... தடைபோட்டதால்
தனிநாடு தவறியது அண்டைய தமிழர் பூமியில்.
அப்படி ஒரு காட்சி வேண்டுமோ தாய்நாட்டில்.
ஆகவே உதய சூரியன்
நமது மடியில்...



**வி.செ.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மிசா சு. வேலுசாமி**
**ஏப்ரல் 25 (2018)**



தனது இளமைப் பருவம் காலந்தொட்டே கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு கோவை மாவட்டம், தடாகம் ஊராட்சியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கழக சீரணிப் படையிலும், பின்னர் தடாகம் கிளைக் கழகச் செயலாளராகவும், கிளை அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1982ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட 'நீதிகேட்டு நெடிய பயணத்தில்' அவருடன் கலந்து கொண்டவர்.

மிசா சட்டத்தின் கீழும் – சட்டநகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**